16.3.2015

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில், விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி-திருந்திய நெல் சாகுபடி பயிற்சி ஞாயிற்றுக்கிழமை அத்திகுளம்-செங்குளம் வருவாய் கிராமத்தில் நடைபெற்றது. ஸ்ரீவில்லி புத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கா.பாஸ்கரராஜ் பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது: வேளாண் விளை பொருள்களை சந்தைமயமாக்குதல், இரண்டாம் பசுமைப் புரட்சியின் நோக்கமான இரு மடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்பதனை அடைய விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் என்றார். ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய உழவியல் துறை உதவி பேராசிரியர், நெல்லில் அறுவடை செய்த பின் நேர்த்தி செய்தல், சேமிப்பு முறை மற்றும் மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றுதல் குறித்து எடுத்துரைத்தார். பூச்சியில் துறை பேராசிரியை சாந்தி, தானிய சேமிப்பில் பூச்சிகளால் ஏற்படும் சேதாரங்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். இப் பண்ணைப்பள்ளி பயிற்சியில் செங்குளம், கடம்பங்குளம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். பண்ணைப்பள்ளி செயல்விளக்கத் திடல் விவசாயி சந்திரன் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை விரிவாக்க சீரமைப்புத் திட்டப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு சிறுதானியங்கள் சாகுபடி பயிற்சி**

திருவாடானை தாலுகா விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சிறுதானியங்கள் சாகுபடி பற்றிய தொழில் நுட்ப பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திருவாடானை

வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் வரவேற்றார். முகாமில் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) சுப்பிரமணியன், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) அறிவரசன், கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறுதானியங்கள் சாகுபடி தொழில் நுட்பம் பற்றி எடுத்துக் கூறினர். இதில் விவசாயிகளுக்கு 4 கிலோ குதிரைவாலி வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர், தொழில் நுட்ப வல்லுநர் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

## <u>விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய பயிற்சி முகாம்</u>

பரமக்குடி உழவர் பயிற்சி நிலையத்தில், வேளாண்மை சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றிய பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு வேளாண்மை துணை இயக்குநர் ஆர். அறிவரசன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ச.கண்ணையா வரவேற்றார். நிலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பயிர் செய்வது பற்றியும், சுழற்சி முறையில் பயிர் செய்வதன் அவசியம் குறித்தும் வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் எஸ்.சக்திவேல் விளக்கமளித்தார். மேலும் கால்நடை மருத்துவர் நா.நாகநாதன் ஆடுகளுக்கு ஏற்படும் நோய்களை தடுக்க தடுப்பூசி போடுவதின் முக்கியத்துவம் மற்றும் ஆடு, மாடுகளுக்கு தேவையான தீவனப்புல் வளர்ப்பது பற்றியும் விளக்கினார். வேளாண்மை துணை அலுவலர் ஆர்.தனதுரை நன்றி கூறினார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ.1.50 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யபடுகிறது. மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்முடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத் தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனை வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 10,189, குறைந்தபட்சமாக, 7,109 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 8,399, குறைந்தபட்சமாக, 6,005 ரூபாய்க்கும் ஏலம் போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 15,999, குறைந்தபட்சமாக, 8,888 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 3,000 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், ஒரு கோடி, 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

### பப்பாளி பயிரிடுவதில்விவசாயிகள் ஆர்வம்

ஆர்.கே.பேட்டை: கோடையில் சந்தை வாய்ப்பு அதிகம் என்பதால், உடலுக்கு ஆரோக்கியம் தரும் பப்பாளி பயிரிடுவதில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பாலாபுரம் பகுதி, ஆந்திர மாநில எல்லையோரம் அமைந்துள்ள

நீர்ப்பிடிப்பு பகுதி. நடப்பு ஆண்டு மழைப்பொழிவே இல்லாததால், விவசாயிகள், குறைந்த நீரில் அதிக லாபம் தரக்கூடிய, பயிர் ரகங்களை பயிரிட்டுள்ளனர். இதில், எஸ்.கே.வி.கண்டிகை அடுத்த, ஓடை கிராமத்தில், சிலர் பப்பாளி பயிரிட்டுள்ளனர். வாழை தோட்டம் போன்று வயலை தயார் செய்து, பப்பாளி கன்றுகளை நடவு செய்கின்றனர். நடவு செய்த, ஏழாவது மாதத்தில் இருந்து, காய்க்க துவங்கும். இரண்டு ஆண்டுகளுக்கு, காய்ப்பு தொடரும். வாரம் ஒரு முறை அறுவடை செய்யலாம். ஒவ்வொரு அறுவடைக்கும் ஏக்கருக்கு ஒரு டன் பழங்கள் கிடைக்கும், ஒரு டன் பழம், 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சொட்டுநீர் பாசனமே பப்பாளிக்கு போதுமானது. பப்பாளி தோட்டத்திற்குள் புகுந்தால், ஒரு புதுமையான, குளுமையான உலகத்தை ரசிக்கலாம். கோடையில், பழரசம் தயாரிக்க, பழங்களின் தேவை அதிகரித்துள்ளதால், பப்பாளி, விவசாயிகளின் பங்காளியாக உருவெடுத்து வருகிறது.

## செழிப்பான சின்ன வெங்காய விவசாயம்

சத்தியமங்கலம் : சத்தியமங்கலம் பகுதியில், தொடர்மழை எதிரொலியாக, சின்ன வெங்காயம் விவசாயம் செழிப்பாக உள்ளது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது கே.என்.பாளையம். இதன் அருகே உள்ளது பெரும்பள்ளம் அணை. இந்த அணைக்கு, நீர் வரத்துக்கான ஆதாரம், கடம்பூர் வனப்பகுதியாகும். கடப்பூர் வனப்பகுதியில் மழை பெய்தால், இந்த அணைக்கு தண்ணீர் வரத்து ஏற்படும். கடந்த ஆண்டு அணையில் தண்ணீர் முழுமையாக வற்றிவிட்டது. இந்த சமயத்தை பயன்படுத்தி, பொதுப்பணித்துறையின் சார்பில், அணை தூர்வாரப்பட்டு, நூற்றுக் கணக்கான வாகனங்களில், மண், கழிவுகள் அகற்றப்பட்டது.கடந்த ஆண்டின் இறுதியில், இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால், அணை நிரம்பியது. அணையில் தண்ணீர்

குறையாமல் நிறைந்துள்ளதால், இப்பகுதி விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால், விவசாயம் சிறப்பாக உள்ளது.குறிப்பாக, இப்பகுதி சின்ன வெங்காயத்துக்கு புகழ்பெற்ற பகுதியாகும். தற்போது இப்பகுதியில், 5,000 ஏக்கர் நிலப்பரப்பில், சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளனர். தற்போது, இந்த சின்ன வெங்காய செழிப்பாக வளர்ந்து பசுமையாக காணப்படுகிறது. இதுகுறித்து, இப்பகுதி விவசாயி ராஜூ கூறியதாவது: பெரும்பள்ளம் அணையில் தண்ணீர் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், இந்த ஆண்டு இப்பகுதி யில் விவசாயிகள் குறைவின்றி, தங்கள் விவசாய நிலங்கள் முழுவதிலும் சின்ன வெங்காயம் பயிரிட்டுள்ளனர். பல ஆண்டுகளுக்குப் பின், நடக்கும் நிகழ்வாகும், என்றார்.

## <u>லாபகரமான காடை வளர்ப்பு தொழில்; கால்நடை மைய பேராசிரியர் அழைப்பு</u>

ஈரோடு : லாபகரமான காடை வளர்ப்பு தொழில் அமைத்துக் கொள்ள, ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் யசோதை, இளைஞர் மற்றும் விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து பேராசிரியர் யசோதை கூறியாதாவது:காடை வளர்ப்பின் மூலம் வரும் வருமானம், உறுதிப்படவும், நிலைபடவும், வணீக ரீதியிலான பண்ணையத்துக்கும், உற்பத்தி சார்ந்த விஷயங்களுக்கும், கவனம் செலுத்துவது அவசியமாகிறது.லாபகரமான பண்ணையம் என்பதை கருத்தில் கொள்ளும்போது, உற்பத்தி திறன் அதிகமுள்ள காடை இனங்களை தேர்ந்தெடுத்து வளர்ப்பது முக்கியம். இதன்படி தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், தரம் உயர்த்தப்பட்ட புதிய காடை இனங்களை உருவாக்கியுள்ளது.இந்த தரம் உயர்த்தப்பட்ட காடை இனத்தில், மூன்று வகை உள்ளது. அதில் நாமக்கல் காடை, நந்தனம் காடை-3, நாமக்கல் தங்க காடை ஆகியவை பிரதானமாகும். நாமக்கல்

காடை, இறைச்சிக்கான வீரிய இனக்காடை ஆகும். ஒரு நாள் வயதுக்காடை குஞ்சியின் சராசரி எடை, 10 கிராம்.இதன் விற்பனை வயது, 25 நாட்கள் முதல், 28 நாட்கள் வரை. விற்பனை வயதில் உடல் எடை, 180 முதல், 210 கிராம் வரை இருக்கும். ஐந்து வாரங்களில் உடல் எடை, 250 கிராம் அடைகிறது. வளர்ந்த ஆண் காடை, 313 கிராம், பெண் காடை, 346.8 கிராம் உடல் எடை கொண்டது.நந்தனம் காடையில் நந்தனம் காடை-1, மற்றும் இரண்டு ஆகியவை, உற்பத்தி திறனை அதிகப்படுத்தும் நோக்கில், 18 தலைமுறையாக தொடர் ஆராய்ச்சியின் மூலம், நந்தனம் காடை-3 உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றது. இது இறைச்சிக்கான இனம் ஆகும்.இந்த இனம், ஆறாவது வாரத்தில் ஆண் காடை, 200 கிராம், பெண் காடை, 247 கிராம் உடல் எடை அமையும்.முட்டை உற்பத்தி, 200 முதல், 205 வரை கொடுக்கும். அதிக நோய் எதிர்ப்பு திறன் கொண்டது. உயிர் வாழும் திறன், 95 சதவீதம் கொண்டது.நாமக்கல் தங்க காடை, ஐந்து வழி கலப்பின தொழில் நுட்பத்தை பின் பற்றி உருவாக்கப்பட்ட, வீரிய இன முட்டைக்காடையாகும். வணீக ரீதியான முட்டை உற்பத்திக்கு உகந்தது. பருவம் அடையும் வயது சராசரியாக, 40 நாட்கள். பருவமடையும் போது உடல் எடை, 261.8 கிராம் இருக்கும். முட்டை உற்பத்தி, 322 நாட்களில், 256 முட்டைகள் தரும். ஏழு முதல், 52 வாரம் உயர் வாழும் திறன் உடையது.மேலும் தகவல் பெற, "பேராசிரியர், கால்நடை மருத்துவ பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், வீரப்பன்சத்திரம், ஈரோடு' என்ற அலுவலகத்தை நேரில் வந்து தெளிவு பெறலாம்.

## <u>சோலார் உலர்த்தி அமைக்க அழைப்பு</u>

ஈரோடு : சூரிய சக்தியில் இயங்கும் சோலார் உலர்த்திகள் அமைக்கும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்கப்படுகிறது. உலர்த்திகள் மூலம் வாழை, தேங்காய், தக்காளி, காய்கறிகள், நறுமண பொருட்கள், இதர பழ

வகைகள் போன்ற பொருட்களை குறைந்த செலவில் உலர்த்தி பயன் பெறலாம். சென்னையில் உள்ள வேளாண் பொறியியல் துறை தலைமை பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம், ஒவ்வொரு சோலார் உலர்த்தியும், 400 ச.அடியில் அமைக்கப்படும்.அதன் அலகு தொகை, 3.68 லட்சம். இதில் அரசு மானியமாக, 50 சதவீதமான, 1.84 லட்சம் வழங்கப்படும். சோலார், பொருட்களை உலர் தேவையான தட்டுகள், நகரும் வகையில் அமைக்கப்பட்ட மேடைகள் அலகு தொகையில் சேரும். சோலார் உலர்த்திகள் தனி நபரோ அல்லது குழுக்களாகவோ அமைத்து மானிய உதவி பெறலாம்.கூடுதல் விபரங்களுக்கு, ஈரோடு வருவாய் கோட்டத்தில் உள்ள விவசாயிகள், உதவி செயற்பொறியாளர் பிரப் ரோடு, ஈரோடு 0424-2266672 மற்றும் கோபி வருவாய் கோட்ட விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், தெற்கு பார்க் வீதி, கோபி 04285-229159 அலுவலகத்தை அணுகலாம் என்று, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

## <u>கிணற்று பாசனத்தில் நெல் மகசூல் அமோகம்</u>

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் கிணற்று பாசனத்தில் நெல் சாகுபடியில் அமோக மகசூல் கிடைத்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 2.23 லட்சம் எக்டேரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. மழை மறைவு பிரதேசம் என்பதால் அதிக நீர் தேவையுள்ள நெல் 20 ஆயிரம் எக்டேரில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. தொடர் வறட்சியால் இந்த ஆண்டு திண்டுக்கல்லில் ஒருசில பகுதிகளில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது. டி.கோவில்பட்டி விவசாயி கே.சின்னமுனியப்பன், அவரது சகோதரர்கள் கிணற்று பாசனத்தில் 7 ஏக்கரில் திருந்திய சாகுபடி முறையில் நெல் பயிரிட்டனர். முறையான நீர் மேலாண்மை, இயற்கை உரம் பயன்படுத்தியதால் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. கூலி ஆட்கள்

கிடைக்காததால் இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டன. ஏக்கருக்கு 4 டன் கிடைத்துள்ளது. விவசாயி கூறியதாவது: செலவை குறைக்க தனித்தனி நிலங்களை ஒருங்கிணைத்து பயிரிட்டோம். உழவு, விதை, நாற்றுநட என ரூ.2 லட்சம் செலவானது. அம்மன் ரகம் பயிரிட்டோம்.

தேவைக்கு ஏற்ப நீர் பாய்ச்சியதால் அமோக மகசூல் கிடைத்தது. சாதாரண முறையில் 2 டன் கிடைக்கும். இயந்திரத்தை பயன்படுத்தியதால் ஒரே நாளில் அறுவடை முடிந்தது, என்றார்.

## மலையில் மணம்வீசும் மனோரஞ்சிதம்

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் மணம் வீசும் மனோரஞ்சித பூ வீடுகளில் அதிகளவு வளர்க்கப்படுகிறது.பொதுவாக வீடுகளில் அழகுக்காக வளர்க்கப்படும் மனோரஞ்சிதம் 8 மீட்டர் சுற்றளவு மணம் வீசும். பறிக்கப்படும் மலர்கள் நான்கு தினங்கள் வரை மணத்தை இழப்பதில்லை. நடவு செய்த 6 மாதத்திலிருந்து பூக்கத் துவங்கும். இதன் மணம் பாம்புகளை ஈர்ப்பதால் வீடுகளில் வளர்ப்பதில் அதிக கவனம் தேவை என்ற நம்பிக்கை உள்ளது. ஆறு இதழ்களை கொண்ட இப்பூவின் வாசனை சென்ட் தயாரிப்புக்கு பயன்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோமாரி தடுப்பூசி முகாம்

வடமதுரை : அய்யலூர் பேரூராட்சியில் நாளை முதல் மார்ச் 25 வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது.அய்யலூர் கால்நடை டாக்டர் ரமேஷ், பேரூராட்சி செயல் அலுவலர் சரவணக்குமார் கூறியதாவது: மூன்று மருத்துவ குழுக்களுக்காக கிராமங்களில் முகாமிட்டு காலை 7.30 மணி முதல் 10 மணி வரை கால்நடைகளுக்கு சிகிச்சை தரவுள்ளனர். நாளை தங்கம்மாபட்டி, பொட்டிநாயக்கன்பட்டி, கருசின்னானூரிலும், மார்ச் 18ல் பாலத்தோட்டம், குப்பாம்பட்டியிலும், 19ல் கருவார்பட்டி, கந்தமநாயக்கனூர், கிருஷ்ணப்பநாயக்கனூரிலும், 20ல் காக்காயன்பட்டி, பஞ்சந்தாங்கி, 21ல் கோம்பை வடக்கு, கோம்பை தெற்கு கிராமங்களிலும்,

23ல் கொன்னையம்பட்டி, வைரபிள்ளைபட்டி, கெங்கையூரிலும், 24ல் அப்பிநாயக்கன்பட்டி, மணியகாரன்பட்டி, கோடங்கிசின்னான் பட்டியிலும், 25ல் தீத்தாகிழவனூர், கஸ்பா அய்யலூரிலும் நடக்கிறது' என்றனர்.

**<u>சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

அவலூர்பேட்டை: குறைந்த தண்ணீரை கொண்டு சூரிய காந்தி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேல்மலையனூர் ஒன்றியத்தில் மழை பொய்த்ததால் முருகன் தாங்கல்,சிறுதலைப்பூண்டி ,வளத்தி, ஆரியபுரவடை உள்ளிட்ட சில கிராமங்களில் சூரிய காந்தியை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மூன்று மாத பயிரான இதற்கு குறைந்த தண்ணீரே போதுமானது. கோடை பயிராக கருதப்படுகிறது. இதன் விதைகளை கிலோ 550 ரூபாய் என திருவண்ணாமலையில் தனியார் கடைகளிலிருந்து வாங்கி வருகின்றனர். ஏக்கருக்கு குறைந்தது 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்.40 முதல் 45 வது நாளில் பூக்கள் வளர துவங்கும். 50 வது நாளில் பெரிய அளவில் பார்ப்பதற்கு அழகான பூக்கள் செடியில் பூக்கும். இந்த பயிருக்கு ஒரு முறை களை எடுத்தலும், மருந்து தெளித்தலும் போதுமானது.குறைந்த செலவும், தண்ணீரும் இதற்கு தேவைப்படுவதால் கோடையை சமாளிக்கலாம். பூக்களை, அறுவடை நேரத்தில் கைகளினால் பறித்து காய வைத்த பின், குச்சியால் அடித்தால் விதைகள் உதிரும். ஒரு பூவில் 150 கிராம் முதல் 500 கிராம் அளவுள்ள விதைகள் கிடைக்கும். இதை மூட்டைகளில் சேகரித்து திருக்கோவிலூர் போன்ற பகுதிகளில் உள்ள கமிட்டிகளில் விவசாயிகள் விற்கின்றனர். 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை 3800 முதல் 4800 ரூபாய் வரையில் விற்கிறது. சூரிய காந்தியை விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருவாய் ஈட்டுவது அதிகரித்துள்ளது.

## கோமாரி தடுப்பூசி முகாம்

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே கால்நடை களுக்கு கோமாரி தடுப்பூசி முகாம் நடந்தது. திருவெண்ணெய் நல்லூர் அடுத்த காந்திக்குப்பத்தில் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி முகாம் நடந்தது. கால்நடை மருத்துவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். உதவி மருத்துவர் ராஜேஷ், உதவியாளர் சையத்ஆசாத் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி தலைவர் வெற்றிவேலன் முகாமை துவக்கி வைத்தார். இம்முகாமில் 500க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஆனைவாரியில் டாக்டர் சங்கையா தலைமையில் 250 கால்நடைகளுக்கும், அரசூரில் டாக்டர் தியாகேஸ்வரன் தலைமையில் 700 கால்நடைகளுக்கும், மழையம்பட்டில் கனகராஜ் தலைமையில் 150 கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

## வெண்டை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கச்சிராயபாளையம்: கல்வராயன் மலை அடிவார பகுதியில் செயற்கை மகரந்த சேர்க்கையின் மூலம் உருவாகும் புதிய வெண்டை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கல்வராயன் மலையின் அடிவார பகுதியான மட்டப்பாறை, துரூர் பகுதிகளில் மகரந்த சேர்க்கையின் மூலம் உருவாக்கும் புதிய ரக வெண்டை சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த வெண்டை 30 நாட்களில் அறுவடைக்கு தயாராகிறது. விதைக்காக சாகுபடி செய்யும் வெண்டையில் அதிக லாபம் கிடைப்பதால் புதிய ரக வெண்டைகள் விவசாயிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. மேலும் 100 கிலோ வெண்டைக்கு 31 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்து தனியார் விதை நிறுவனங்கள் நேரடியாக கொள்முதல் செய்வதால் சிரமமின்றி கூடுதல் லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறினர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

வருஷநாடு : மத்திய-மாநில அரசின் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் குமணந்தொழுவில் நடந்தது. ஒன்றியக்குழுத்தலைவர் முருக்கோடைஇராமர் தலைமை வகித்தார். ஊராட்சித்தலைவர் செல்வராணி, இயற்கை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு நிர்வாக இயக்குனர் முருகதாசன் முன்னிலை வகித்தனர். இதில் விவசாயிகளுக்கு சுயதொழில் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது. திட்ட பயிற்சியாளர் ரவீந்திரன், இமையவரம்பன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கோடையில் சிறுதானிய பயிர் சாகுபடி செய்ய ஆலோசனை

காளையார்கோவில் : "காளையார்கோவிலில் வறட்சியை தாங்கி, குறைந்த செலவில் அதிக லாபம் தரும் சிறுதானிய பயிரை சாகுபடி செய்யுமாறு," வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் சவுமியான் தெரிவித்தார். அவர் கூறியதாவது: இந்த ஒன்றியத்தில் 12,000 எக்டேர் விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்தனர். கண்மாய்களில் தேங்கிய நீர் மற்றும் கிணற்றுப்பாசனத்தில் சிறுதானிய பயிர் சாகுபடி செய்யலாம். நிலத்தை நன்கு உழவுசெய்து, தொழு உரத்துடன் 10 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா உரத்தை சேர்த்து இடவேண்டும். எக்டேருக்கு12.5 கிலோ குதிரைவாலி, சாமை,வரகு, தினை விதையை விதைக்க வேண்டும். விதைத்து 40 நாட்களில் களை எடுத்து பராமரிக்கவும். இப்பயிர்களுக்கு குறைந்த தண்ணீர் போதும். இவை வறட்சியை தாங்கி வளரும், நோய் தாக்கம் இருக்காது. விதைத்து 75 முதல் 90 நாளில் மகசூல் கிடைக்கும். எக்டேருக்கு 2 ஆயிரம் கிலோ

மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ ரூ.25க்கு விற்பனையாகும். வேளாண்மை விரிவாக்க மையங்களில் நீர், நிலவள திட்டத்தில் சிறுதானிய பயிர் திடல்கள் அமைக்க குதிரை வாலி, தினை, சாமை, வரகு விதைகள், உயிர் உரம், இடு பொருட்கள் முழு மானியத்தில் வழங்கப்படும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகள் மகிழ்ச்சி: டெல்டா மாவட்டங்களில் திடீர் பலத்த மழை</u>**



திருச்சி: திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நேற்று காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை 2 மணிநேரம் மிதமான மழை பெய்தது. முத்துப்பேட்டையில் நேற்று காலை 10.30 மணி முதல் மதியம் 2 மணிவரை கனமழை கொட்டித் தீர்த்தது. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, திருவையாறு, வல்லம் பகுதிகளில் நேற்று மதியம் 12.30 மணிக்கு தொடங்கி 10 நிமிடங்கள் லேசான மழை பெய்தது. புதுக்கோட்டையில் நேற்று அதிகாலை 2.30 மணி முதல் 4 மணி வரை இடைவிடாது மழை பெய்தது. பின்னர் காலை 6 மணி முதல் 8 மணி வரை மீண்டும் மழை பெய்தது. இடையில் வெயில் அடித்த நிலையில், மீண்டும் மதியம் 1.30 மணி முதல் 2 மணி வரை மழை பெய்தது. அறந்தாங்கியில் நேற்று காலை 5.45 மணி முதல் 6.30 மணி வரை மழை திருமயத்தில் நள்ளிரவு 1.30 மணி முதல் 4 மணி வரை மழை பெய்தது. இதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பொழிந்தது. பெரம்பலூரில் நேற்று மதியம் 12.30 மணியளவில் மேகமூட்டத்துடன்

காணப்பட்ட நிலையில், திடீரென 10 நிமிடங்கள் லேசான மழை பெய்தது. இதே போல அரியலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மதியம் சிறிது நேரம் மிதமான மழை பெய்தது. திருச்சியில் நேற்று மதியம் சிறிது நேரம் தூறல் விழுந்தது. இந்த மழை உளுந்து பயிருக்கு ஏற்றது என்று டெல்டா விவசாயிகள் தெரிவித்தனர். அதேபோல் பலத்த மழை பெய்த இடங்களில் வெயில் தணிந்து, குளிர்ச்சி நிலவியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**மரக்காணத்தில் பூத்து குலுங்கும் முந்திரி தோட்டங்கள்**



மரக்காணம்,: விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் மண்டவாய், வட அகரம், காக்காப்பாளையம், நாரவாக்கம், கீழ்பேட்டை, அனுமந்தை, கைப்பாணி உள்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ள விவசாயிகள் முந்திரி, மா, தென்னை போன்ற தோட்டப் பயிர்கள் மூலம் வருமானம் ஈட்டுகின்றனர். இந்த ஆண்டு எதிர்பாராதவிதமாக பருவ மழையும் பொய்த்து விட்டதால் நெல், மணிலா போன்ற பயிர்களை நடவு செய்யவில்லை. ஒரு சிலர் நடவு செய்த பயிர்களுக்கும் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இதன் காரணமாக தோட்டப் பயிகளையே நம்பி இருக்கும் நிலை உள்ளது. இந்த பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் முந்திரி மரங்கள் பூ பூத்து பிஞ்சுக்கள் விடும் இந்த பிஞ்சுக்கள் முற்றி ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பழுத்து அறுவடைக்கு தயாராகி விடும். இந்த பகுதியில் விளையும் முந்திரி கொட்டைகளை வியாபாரிகள் கொள்முதல் செய்து அவற்றை உடைத்து முந்திரி பருப்புகளாக ஏற்றுமதி செய்கின்றனர். இந்த பகுதியில் பருவ மழை பொய்த்து பாதிக்கப்பட்டாலும் முந்திரி மரங்கள் அதிகளவில் பூத்து காய்காய்த்து இருப்பதால் முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தி.மலை மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் வருகிற 20ம்தேதி நடைபெற உள்ளதாக கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் இந்த மாதத்திற்கான(மார்ச்) மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வருகிற 20ம் தேதி(வெள்ளிக் கிழமை) காலை 10 மணியளவில் கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பொது கோரிக்கைகள் இருப்பின் அதன்விவரம் குறித்த மனுக்களை வருகிற 16ம் தேதிக்குள் திருவண்ணாமலை கலெக்டருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். அதே போல கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்ப பெட்டிகளிலும் விவசாயிகள் கோரிக்கை மனுக்களை போடலாம் என்று கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## மரவள்ளி கிழங்கிற்கு தனி ஆணையம்

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை மையத்தில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. தேசிய நெடுஞ்சாலையால் பாதிக்கப்பட்டவர்கள் நலச்சங்க தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தனசேகர் வரவேற்றார். செல்வராஜ், தேவராஜ், கனகராஜ், மாநில செய்தி தொடர்பாளர் புருசோத்தமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் எம்எல்ஏ பழனிசாமி, டெல்டா பாசன விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ரவீந்திரன், பாரதியகிசான் சங்கத்தலைவர்

அய்யாக்கண்ணு, தமிழக மரவள்ளி உற்பத்தியாளர் சங்க மாநில தலைவர் குமார், மாவட்ட தலைவர் செல்வராஜ், செயலாளர் பழனியப்பன், துணைத்தலைவர் கனகராஜ், கோவை மாநகர் தலைவர் தங்கராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். மத்திய, மாநில அரசுகள் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்தல், கரும்புக்கு விலை நிர்ணயிக்கும் போது சர்க்கரை சத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்காமல் கரும்பாலை கழிவான மொளாசசில் இருந்து, கிடைக்கும் எரிசாராயத்தை பயன்படுத்தி இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வருமானத்தையும், கரும்புச்சக்கையிலிருந்து கிடைக்கும் மின்சாரம் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு டன்னுக்கு ரூ.3500 விலை நிர்ணயிக்க மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்வது, சர்க்கரைத்துறை ஆணையத்திற்கு இணையாக மரவள்ளிக்கு தனி ஆணையம் அமைத்து அரசே கொள்முதல் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பழனியப்பன் நன்றி கூறினார்.

## <u>சாமந்தி பூ பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்</u>

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் அருகே கள்ளிபாடி கிராமத்தில் சாமந்தி பூ பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ரிஷிவந்தியம் அருகே உள்ள கள்ளிபாடி கிராமத்தில் விவசாயிகள் கடந்த ஒரு வருடமாக பருவமழை பொய்த்து விட்டதால் தங்களது விவசாய நிலங்களை அப்படியே விட்டுவிட்டு, பெங்களூர் பகுதிக்கு கூலி வேலை சென்றனர். இந்த நிலையில் தண்ணீர் வறட்சியை சமாளிக்க விவசாய பணிகளை தொடங்கி, அதில் சில விவசாயிகள் கரும்பு, நெல் கம்பு பயிரிடுவதை தவிர்த்து சாமந்தி பூ பயிரிட்டுள்ளனர். சாமந்தி பூ பயிர், மூன்று மாத பயிராகும். இதை பயிரிடுவதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை செலவாகும். அதிகமாக உரம் தேவைப்படுவதில்லை. இயற்கையாக கிடைக்கும் மாட்டு சாணம் மட்டுமே போதும். தண்ணீர் இறைப்பதும் வாரத்திற்கு ஓரு முறை மட்டும் போதும். இரண்டு

நாட்களுக்கு ஒரு முறை ஒரு ஏக்கருக்கு 40 முதல் 60 கிலோ வரை பூக்கள் பறிக்கப்படுவதாகவும், இதன் விலை கிலோ ரூ.40க்கு விற்கப்படுதால் நான்கு மடங்கு லாபம் கிடைப்பதால், இப்பகுதி விவசாயிகள் சாமந்தி பூ பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## <u>வாசனை பயிர்கள் வளர்ப்பில் ஆர்வம் செலுத்தலாமே</u>

உடுமலை, : தமிழகத்தில் வளர்க்க எத்தனையோ வாசனை பயிர்கள் உள்ளன.இன்று பல பகுதி விவசாயிகள் லாபம் தரும் உத்திகள் மேல் ஆர்வம் காட்டி வருகின்றனர். செலவு குறைந்த பல விவசாய உத்திகள் பிரபலமாகி வருகின்றன. இருப்பினும் நிறைய அன்னியசெலாவனி ஈட்டித் தரும் பல பயிர்களை நமது மண்ணில் வளர்க்கலாம் என்பதை அறியாமல் வழக்கமான பயிர் தேர்வு மட்டும் செய்யப்படுவதால் பலரும் ஒரே பயிர் சாகுபடி செய்த பாவத்தால் விலை வீழ்ச்சி, கடும் பூச்சி, நோய் பாதிப்பு தரம் பேண இயலாத சூழல், பிற மாநிலத்தவர் போட்டியால் பாதிப்பு பருவநிலை மாற்றத்தால் மகசூல் இழப்பு முதலிய கடும் தாக்குதலுககு இலக்காகி வேளாண்மையில் லாபம் இல்லை என்று பொய் பிரசாரம் செய்வது வருத்தம் தரும் நிகழ்வாகும். வாசனை பயிர்கள் குறைந்த அளவே நமது வீட்டில் பயன்படுபவை. ஆனால் உணவு தயாரிப்பில் அவை இல்லாவிட்டால் அவ்வளவு தான். சப்பென்று ருசி இன்றி உணவு மாறும். குறைந்த அளவு நிலப்பரப்பில் கூட ஏன் சிறு சிறு பாத்திகளாக தென்னந்தோப்பு, மாந்தோப்பு, தனித் தோப்பு குழிகளில் வளர்க்க உகந்தவை, சூரிய ஒளி,மண்வளம், நீர், முதலீடு, விற்பனை வாய்ப்பு முதலியவற்றை கணக்கில் கொண்டு உங்கள் பகுதிகளில் எந்த வாசனை பயிர் சாகுபடி லாபம் தரும் என்பதை மூத்த விவசாயிகள் அனுபவம் மற்றும் நிபுணர்களிடம் நிபுணர்களிடம் ஆலோசனை செய்தும் மார்கெட்டை கவனித்து விலை ஏற்றத் தாழ்வு மதிப்பு கூடுதல் முதலியவற்றை கண்காணிக்கும் போது நல்ல லாபம் பெற வாய்ப்புள்ளது. நமது தமிழகத்தில் சாகுபடிகககு உகந்த வாசனை பயிர்கள் பல குறிப்பாக மிளகாய், ஏலக்காய், வெங்காயம், மிளகு, கடுகு, சீரகம்,

கொத்தமல்லி, புதினா, இஞ்சி, மஞ்சள், வெள்ளை பூண்டு, சாதிக்காய், லவங்கம் முதலிய பல வாசனை பயிர்கள் சாகுபடி பரப்பு அதிகரித்திட இருந்தும் பலரும் முன்வராததால் உரிய விபரம் தெரியதாதால் லாபம் தரும் பண்ணையாக தம் நிலப்பரப்பை மாற்றாமல் உள்ளனர். உங்கள் பகுதிக்கு ஏற்ற இந்த பயிர்களை சாகுபடி செய்திட உரிய தொழில்நுட்ப அறிவு பெற பல நிபுணர்கள் உதவிகரமாக உள்ளனர். வாசனை பயிர்கள் ஏற்றுமதிகரும் வாய்ப்புள்ளதால் குழுவாக விவசாயிகள் சேர்ந்து மொத்த கொள்முதல் தரம் பேணுதல் பற்றி சிறப்பு பயிற்சிகளில் கலந்து கொள்ளலாம். வாசனை பயிர்கள் சாகுபடிக்கு நிறைய வாய்ப்பு உள்ளதால் இது குறித்து மேலும் விபரம் அறிய உடுமலை வட்டார ஒழுங்குமுறை மார்க்கெட் வளாகத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனரை அணுகவும்.

## ரோஜா பூங்கா செடிகளுக்கு உரமிடும் பணி தீவிரம்

ஊட்டி, : ஊட்டி ரோஜா பூங்காவில் செடிகளுக்கு உரமிடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.இவ்வாண்டு கோடை சீசனுக்காக ஊட்டியில் உள்ள சுற்றுலா தலங்கள் தயராகி வருகின்றன. ஊட்டி விஜயநகரம் பகுதியில் உள்ள ரோஜா பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் பூங்காவின் மூன்று அடுக்குகளிலும் உள்ள ரோஜா செடிகள் கடந்த ஜனவரி மாதத்தில் காவத்து செய்யப்பட்டது. தொடர்ந்து பூங்காவில் பல்வேறு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது கவாத்து செய்யப்பட்ட மலர் செடி லேசாக துளிர் விட்டு வருகிறது. இந்த மலர் செடி அனைத்தும் ஏப்ரல் மாதத்தில் பூக்கும் வகையில் மலர் செடிகளுக்கு உரமிடும் பணிகள் நடந்து வருகிறது. உரமிடும் பணிகளில் பூங்கா ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## திருச்சியில் வேளாண் உயர்நிலை மாநாடு துவக்கம் விவசாயிகளை கவர்ந்த சிவலிங்கம் சிலை, தேர்

திருச்சி, : திருச்சியில் வேளாண் உயர்நிலை மாநாடு, கண்காட்சி நேற்று துவங்கியது. முந்திரி, கடலைப்பருப்பால் செய்யப்பட்ட சிவலிங்கம் சிலை, நெல் மணிகளை கொண்டு தயார் செய்யப்பட்ட தேர் விவசாயி களை கவர்ந்தது. திருச்சியில் தென்னிந்திய தொழில் வர்த்தகம் சார்பில் 5வது வேளாண் உயர்நிலை மாநாடு, 3 நாள் கண்காட்சி நேற்று துவங்கியது. உறுப்பினர் அப்சல் வரவேற்றார். செயலா ளர் ராகவன், நவலூர்குட்டப் பட்டு வேளாண் கல்லூரி முதல் வர் பாண்டியராஜன் முன்னிலை வகித்தனர். கண்காட்சியை திறந்து வைத்து கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசு கையில், இன்றைய விவசாயிகள் பச்சை, சிகப்பு துண்டை மாற்றி கொள்ளக் கூடாது. உள் ளத்தை மாற்றி கொள்ள வேண்டும். நடைமுறையை மாற்றி கொள்ளக்கூடாது. சிந்தனையை மாற்றி கொள்ள வேண்டும். நம்பிக்கை, தன்னம்பிக்கையை விவசாயிகள் இழந்து விட்டனர். அவர்கள் பல இழப்புகளை சந்தித்துள்ளது தான் இதற்கு காரணம். நிலம், நீர், ஆதாரத்தை நம்ப வேண்டும். இன்றைய இளைஞர்கள் விவசாயத்துக்கு வரவேண்டும். இந்தியாவில் 262 மில்லியன் டன் உணவுப்பொருட்கள் உற் பத்தி செய்யப்படுகிறது. ஆனால் 168 மில்லியன் டன் தான் தேவை. தேவையைவிட உற்பத்தி அதிகமாகவே உள்ளது. தமிழகத் தில் 81 லட்சம் விவசாயிகள் உள் ளனர். இதில் 40 சதவீதம் பேர் துணை தொழிலுக்கு சென்றுவிட்டனர். 52 சதவீதம் பேர் மட் டும் நிலத்தை நம்பி விவசாயம் செய்கின்றனர். விவசாயத்தில் உரம், பூச்சி மருந்து பயன்படுத்துவதை குறைக்க வேண்டும் என்றார். கண்காட்சியில் 50க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் விருத்தாச்சலத்தில் உள்ள வேளாண் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் முந்திரி மற்றும் கடலை பருப் பால் ஆன சிவலிங்கம் சிலை, ஆடுதுறை நெல்

ஆராய்ச்சி நிலையம் சார்பில் நெல் மணி களை கொண்டு தயார் செய்யப்பட்ட திருவாரூர் தேர் உள்ளிட் டவை விவசாயிகளை பெரிதும் கவர்ந்தது.

**ஆலத்தூர் வட்டத்தில் எண்ணெய்வித்து பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி**

பாடாலூர், : ஆலத்தூர் வட்டார அளவில் எண்ணெய்வித்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் ஆலத்தூர் வட்டார அலுவ லக கூட்ட மன்றத்தில் நடைபெற்றது. முகாமிற்கு ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அண்ணா துரை தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் வெண்ணிலா முன்னிலை வகித்தார்.பயிற்சியில் மண்மாதிரி சேகரித்தல், நிலக்கடலை விதை நேர்த்தி செய்தல், வேர் அழுகல் நோயினை கட்டுப்படுத்தும் முறை, ஜிப்சம் இடும் முறை, பயிர் பாதுகாப்பு முறை, தரமான நிலக்கடலை உற்பத்தி செய்யும் முறை, எள் பயிருக்கு நுண்ணூட் டம் இடும் முறை, சூரியகாந்தி பயிரில் தரமான நன் கு திறட்சியான விதைகள் உற்பத்தி செய்யும் முறை, எண்ணெய்பனை சாகுபடி முறைக்கான தொழில்நுட்ப செய்திகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் தியாகு, வேளாண்மை அலுவலர் சந்திரன், துணை வேளா ண்மை அலுவலர் ராமச்சந்திரன் ஆகியோர் பயிற்சியளித்தனர். பயிற்சியின் 2ம் நாளாக பாடாலூர் கிராமத்திற்கு வயல்வெளிப்பயணம் மேற்கொண்டு நிலக்கடலை சாகுபடியில் சொட்டிநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு வயல்வெளி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் ஆலத்தூர் வட்டாரத்தை சேர்ந்த 30 விவசாயிகள் பயனடைந்தனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் மணிகண்டன், துரைசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## நவீன தொழில்நுட்பத்தை கையாண்டால் எண்ணெய் வித்துப் பயிரில் கூடுதல் மகசூல் பெறலாம் வேளாண் துறை பரிந்துரை

அன்னவாசல், : நவீன தொழில்நுட்பத்தை கையாண்டால் எண்ணெய்வித்துப் பயிரில் கூடுதல் மகசூல் பெறலாம் என்று வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அடுத்த குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் எண்ணெய்ப் பனைத் தேசிய இயக்கத்தின் சார்பில் எண்ணெய்வித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.இதற்குத் தலைமை வகித்து துவக்கிவைத்த பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி பேசியதாவது: எண்ணெய்வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற வேளாண் துறை பரிந்துரைக்கும் நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயிகள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் அரசு அறிவிக்கும் வேளாண் திட்டங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், இதுதொடர்பான பயிற்சி முகாமில் அறிந்துகொண்ட நவீன தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும் என்றார். இதனைத் தொடர்ந்து, நிலக்கடலையில் விதைநேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, உர நிர்வாகம், களை நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு ஆகியன குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் பயிற்சி அளித்தார். குடுமியான்மலை மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் இப்ராகிம், பயிர்களில் நுண்ணூட்டங்களின் பங்கு மற்றும் உயிரி உரங்கள் இடுவதன் அவசியம் குறித்து விளக்கினார். குடுமியான் மலை வேளாண் கல்லூரி உழவியல் பேராசிரியர் வீரமணி, நிலக்கடலைச் சாகுபடித் தொழில்நுட்பங்களை விளக்கினார். பூச்சியியல் உதவிப் பேராசிரியர் அருள்பிரகாசம் நிலக்கடலையைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதலை விளக்கினார். முகாமில் பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, விதை நேர்த்தி, ஊட்டச்சத்துக் கரைசல் தெளித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் அண்ணா பண்ணையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை வயல்களை

நேரில் காண்பித்துத் தொழில்நுட்பங்கள் விளக்கிக் கூறப்பட்டது. முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு எண்ணெய்வித்துத் தொழில்நுட்பக் கையேடு மற்றும் பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. முகாம் நிறைவில் வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## கூட்டுறவு சங்கம் சார்பில் விவசாயிகள் இருவருக்கு பவர் டில்லர் கருவி அளிப்பு

பொன்னமராவதி, : பொன்னமராவதி அருகே உள்ள ஆலவயல தொடக்கவேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் விவசாயிகள் 2 பேருக்கு ரூ. 2.8 லட்சம் மதிப்பீட்டிலான பவர் டில்லர் கருவிகள் வழங்கப்பட்டன.இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் பழனிச்சாமி வயலில் உழவுப்பணிக்கு துணைபுரியும் பவர் டில்லர் கருவிகளை விவசாயிகள் 2 பேருக்கு வழங்கினார்.நிகழ்ச்சியில் சங்கச் செயலாளர் பழனிச்சாமி, துணைத் தலைவர் அழகு மற்றும் இயக்குநர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தென்னை மரங்களில் போரான் சத்துபற்றாக்குறை வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம்,: தென்னை மரங்களில் காணப்படும் சாம்பல் சத்து மற்றும் போரான் சத்து பற்றாக்குறையை போக்கும் வழிமுறைகள் குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னைக்கு மற்ற சத்துக்களை விட சாம்பல் சத்துதான் மிக அதிகமாக தேவைப்படுகிறது. இந்த சத்து குறைந்தால் தேங்காய் அளவு சிறுத்து, எண்ணிக்கையும் குறைந்து விடும். மேல்இலைகள் பசுமையாக இருந்தாலும் அடி இலைகளில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் தோன்றி மஞ்சள் நிறமடைந்து பின்னர் பழுப்பு நிறமடையும். இலைகள் கீழ்நோக்கி தொங்கத் தொடங்கும். முதிர்ச்சி

அடையும் முன்பே இலைகள் உதிர்ந்து விடும் இக்குறையை போக்கிட 5 வருடங்களுக்கு மேல் வயதுடைய தென்னைமரத்திற்கு ஒரு வருடத்திற்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழுஉரத்துடன் யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.500 கிலோ உரங்களை கலந்து மரத்தடியில் இருந்து 5 அடி தள்ளி வட்டமாக உரமிட்டு மண்வெட்டியால் உரத்தை மண்ணுடன் கலந்து பிறகு நீர்பாய்ச்ச வேண்டும். மேற்கண்ட உரத்தை இரண்டாக பிரித்து ஜூன் - ஜூலை மாதத்திலும், டிசம்பர் - ஜனவரி மாதத்திலும் இரண்டு முறையாக பிரித்து இட வேண்டும். பொட்டாஷ் உரம் 2 கிலோவிற்கு பதிலாக 3.500 கிலோ இடுவதினால் தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தி கட்டுப்படுத்தப்படுகிறது. போரான்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இளம் கன்றுகளில் இலை பிரியாமல் இருக்கும். வளரும் குருத்து இலைகள் வளர்ச்சி குன்றி இலைகள் பிரியாமல் இருக்கும். பாளையில் இளம் பிஞ்சுகள் காய்ந்து கருப்பாக காணப்படும். குரும்பைகள் அதிகமாக கீழே உதிரும். வெற்றுத் தேங்காய்கள் மற்றும் ஒல்லிக்காய்கள் தோன்றும். தேங்காய்களில் வெடிப்புகளும், நீளமான் எடை குறைந்த தேங்காய்கள் தோன்றும். இக்குறைகளை போக்கிட நன்கு வளர்ந்த தென்னைமரத்திற்கு ஆண்டுதோறும் ஒரு மரத்திற்கு ஒரு கிலோ வீதம் தென்னை நுண்ணூட்ட சத்து உரத்தை இட வேண்டும் அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தயாரிப்பான தென்னை ஊட்டச்சத்துகரைசல் (தென்னை டானிக்) மரம் ஒன்றுக்கு 200 மில்லி வீதம் 6 மாதத்திற்கு ஒரு முறை வேர்மூலம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## <u>நீடாமங்கலம் அருகே கல்லூரி மாணவிகள் கிராமங்களுக்கு சென்று வேளாண் பயிற்சி</u>

நீடாமங்கலம், : தஞ்சையில் இயங்கும் மத்திய அரசு நிறுவனமான இந்திய பயிர் பதன தொழில் நுட்ப நிலையத்தில் பி.டெக் இறுதியாண்டு படிக்கும் 16 மாணவிகள் கிராம திட்டத்தில் பயிற்சி பெற நீடாமங்கலம்

வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தங்கி கிராமங்களுக்கு சென்று 2 வார பயிற்சி பெற்று வருகின்றனர். தமிழ்நாடு, புதுச்சேரி, மகாராஷ்டிரா, கேரளா மாநிலத்தை சேர்ந்த மாணவிகள் இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கல்லூரி இயக்குனர் சிங்காரவடிவேல் உத்தரவுப்படி, உதவி ரோசிரியை மீனாட்சி வழிகாட்டுதல் படி பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் பண்ணைகளில் நடைபெறும் விவ சாய பணிகளை விளக்கி வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் பயிற்சி அளித்து வருகிறார். பயிற்சியின் ஒரு பகுதியாக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சூடோமோனாஸ் பயிர் பாதுகாப்பு மருந்து தயாரித்தல், உயிர் உர உற்பத்தி நிலையத்தில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம் தயாரித்தல், அரசு விதைப்பண்ணை காஞ்சிகுடிகாட் டில் விதை சுத்திகரிப்பு பணி ஆகியவற்றை பார்வையிட்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியின் ஒருபகுதியாக திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து காண்பித்தனர். பயிற்சி பெறும் மாண விகளை இணை பேராசிரியர் கவிதாஅபிராமி ஆய்வு செய்தார். உதவிபேராசிரியர்கள் காமராஜ்,கவிதாஸ்ரீ உடனிருந்தனர். ஏற்பாடுகளை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன், முனைவர் ரமேஷ் செய்திருந்தனர்.

## வயலுக்கே சென்று மேய்ச்சலில் இருக்கும் மாடுகளுக்கு தடுப்பூசி

முத்துப்பேட்டை, : முத்துப்பேட்டை அருகே மருத்துவ குழுவினர் வயலு க்கே சென்று மேய்ச்சலில் இருக்கும் மாடுகளுக்கு கோ மாரி தடுப்பூசி போட்டனர். திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் கால்நடைகளுக்கான 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடந்த மார்ச் 1ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. வரும் 21ம் தேதி வரை முகாம் நடைபெற உள்ளது. தற்போது முத்துப்பேட்டை பகுதியில் அறுவடை முடிந்து விவசாய நிலங்களில் மாடுகளை கிடை சேர்த்து உள்ளனர். விவசாய நிலங் களில் எஞ்சியுள்ள வைக்கோல், புல்

போன்றவை கால்நடைகளுக்கு உணவா கவும், கால்நடை களின் சாணம் உரமாகவும் பயன் படுகிறது, கிடைகளில் காளை மாடுகளும் இருப்ப தால், கிடைகளுக்கு அனுப் பப்படும் பசுக்கள் இயற்கை யாக கருத்தறிக்க வாய்ப் புள்ளதால் பெரும்பாலான கால்நடை வளர்ப்போர், தங்களுடைய மாடுகளை கிடைகளில் மேய்ச்சலுக்கு அனுப்பியுள்ளனர். அனைத்து மாடுகளுக் கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட வேண்டும் என கால்நடை பராமரிப்புத்துறை அறிவுறுத்தி உள்ளதால், முத்துப்பேட்டை பகுதியில் கால்நடை மருத்துவக்குழு வினர் பசு கிடைகளுக்கு நேரடியாகச் சென்று அங்கு ள்ள மாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டு வருகின்றனர். நேற்று கரையாங்காடு பகுதியில் கிடையிலுள்ள 729 மாடுக ளுக்கு தடுப்பூசி போடப் பட்டது. முன்னதாக விளாங்காடு ஊராட்சி மன்ற தலைவர் ஜெயராமன் முகா மை தொடங்கி வைத்தார். ஊராட்சி மன்ற ஊறுப்பினர் சக்திவேல், முத்துப்பேட்டை கால்நடை மருத்துவர் கங்காசூடன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

## <u>நடப்பாண்டில் இந்தியாவில் 2.5 மில்லியன் டன் பயறு பற்றாக்குறை இருக்கும்</u>

திண்டுக்கல், : உலகளவில் பயறுவகைகள் 107 நாடுகளில் பயிரிடப்படுகிறது. 73 மில்லி யன் ஹெக்டேர் பரப்பளவில் பயிர்சாகுபடி செய்யப்பட்டு 66 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகளவில் இந்தியா பயறு வகைகளில் மிகப்பெரிய உற்பத்தியாளர்களா கவும், நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளராகவும் உள்ளது.இந்திய வேளாண் அமைச்சகத்தின் கணக்கீட்டின்படி இந்தியாவின் மொ த்த பயறுவகை உற்பத்தி நடப்பாண்டில 19.50 மில்லியன் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்திய அரசின் பொருளாதாரம் மற்றும் புள்ளியல் இயக்குநரகத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையின்படி நடப்பாண்டியில் இந்தியாவின் பயறுவகை நுகர்வுத் தேவையானது 22 மில்லியன் டன்களாகும். கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர் ஆகிய

நாடுக ளில் இருந்து இந்தியா 60 க்கும் அதிகமான பயறு வகைகளை இறக்குமதி செய்கிறது. தமிழ்நாட்டில் உளுந்து மற்றும் பாசிப்பயறின் உற்ப த்தி 0.89 லட்சம் டன்கள் மற்றும் 0.34 லட் சம் டன்களாகும். தற்போது விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உளுந்தின் சராசரி விலை கிலோவிற்கு ரூ.54ம், பாசிப்பயறின் சராசரி விலை கிலோவிற்கு ரூ.64 ஆகவும் உள்ளது. தற்போது நெல்லுக்குப் பிந்தைய சாகுபடியான உளுந்தும், பாசிப்பயறும் அறுவடை சமயத்தில் உள்ளன. எனவே விவசாயிகள் விளைவித்த உளுந்து மற்றும் பாசிப்பயரை இருப்பு வைக்கலாமா, விற்க லாமா என்று தெரிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதன்படி மார்ச், மே மாதத்தில் உளுந்தின் விலை கிலோவிற்கு ரூ.57-59ம், பாசிப்பயறின் விலை கிலோவிற்கு ரூ.64-65வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உளுந்து பயறுக்கு வரும் ஜுன்- ஜு லை மாதங்களில் கிலோவி ற்கு ரூ.3வரை உயர வாய்ப்புள்ளது. ஆனால் பாசிப்பயறுக்கு விலை உயர வாய்ப்பில்லை. எனவே விவசாயிகள் இத்தகவலின் அடிப்படையில் அறுவடை செய்த உளுந்தையும், பாசிப்பயறையும் விற்பனை செய்ய லாம் என்று திண்டுக்கல் வேளாண் வணி துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

***மகிமைமிக்க மணத்தக்காளி கீரை***



மணத்தக்காளி, தானாகவே தோட்டங்களில் வளரும் ஒருவகைச் செடி. இதன் இலை மற்றும் காய் மருத்துவக் குணம் வாய்ந்தது. மணத்தக்காளி யின் பழம் கறுப்பாக மிளகு போல இருப்பதால் இதனை 'மிளகு தக்காளி' என்றும் கூறுவர்.

காய்க்கும் கபந்தீரும் காரிகையே – அவ்விலைக்கு

வாய்கிரந்தி வேக்காடு மாறுங்காண் – தீக்குள்
உணக்கிடு வற்றல் உறுபினை யோர்க் காகும்
மணத்தக்காளிக்குள்ள வாறு

மணத்தக்காளியின் காய், மார்பில் சேரும் கோழை, இருமல் மற்றும் இளைப்பை நீக்கும். வாயில் ஏற்படும் புண் மற்றும் உடல் சூட்டைப் போக்கும் என பதார்த்த குண சிந்தாமணி பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கீரையில் ரிபோபிளோவின், வைட்டமின் சி, பீட்டா கரோட்டின் போன்ற சத்துகளும், கால்சியம், பொட்டாசியம் மற்றும் இரும்புத் தாதுக்களும் உள்ளன. மணத்தக்காளி வாய்ப்புண்ணை தீர்க்கக் கூடியது. வாய்ப்புண் உள்ளவர்கள் இந்த கீரையை ஒரு கைபிடி அளவு நன்றாக மென்று சாப்பிடலாம். இதை உணவிலும் தினம் சமைத்து உண்ணலாம். வயிற்றுப் புண்களைக் குணமாக்கும், மலமிளக்கும் தன்மையும் இந்தக் கீரைக்கு உண்டு. ரத்தசோகை நோய் காரணமாக சிலருக்கு உடல், கை, கால்களில் வீக்கம் ஏற்படும். அவர்கள் இந்தக் கீரையை சமையல் செய்து சாப்பிட இரும்புச் சத்து அதிகரிக்கும், வீக்கம் குறையும். மணத்தக்காளி கீரை சிறுநீரைப் பெருக்கும் இயல்புடையது. இதன் இலையில் உள்ள நைட்ரிக் ஆக்சைடு என்ற வேதிப்பொருள், வயிற்றில் உள்ள கட்டிகளைக் கரைக்க உதவுகிறது. கல்லீரல் மற்றும் மண்ணீரலில் ஏற்படும் வீக்கங்களையும் குறைக்க உதவுகிறது. மணத்தக்காளி இலை, மத்திய நரம்பு மண்டலம் சிறப்பாக இயங்க உதவுகிறது. நரம்புகள் தூண்டப்படுவதால் சிலருக்கு கை, கால்களில் எரிச்சல் போன்ற உணர்வு ஏற்படும், தூக்கமின்மை

ஏற்படும். இப்பிரச்சினை உள்ளவர்கள் தினமும் மணத்தக்காளி இலையை சமைத்து உண்டு வரலாம். அக்கி நோய்க்கு மணத்தக்காளி இலையை அரைத்துப் பூசலாம். மணத்தக்காளி காய், வாந்தியைப் போக்கும், கோழையை அகற்றும். இதற்கு மலத்தை இளக்கும் தன்மையுள்ளதால், மூல நோய் உள்ளவர்களும் இதை உணவில் அடிக்கடி சமைத்துச் சாப்பிடுவது நல்லது. மணத்தக்காளிப்பழம் அதிக சத்துள்ளது. காச நோயாளிகளுக்கு கொடுக்கலாம். தாதுக்களுக்கு நல்ல பலத்தை அளிக்கும். வெயில் காலங்களில் உடலில் ஏற்படும் சூடு காரணமாக வாய்ப்புண், சிறுநீர்த் தடை போன்றவற்றுக்கு சிறந்த மருந்து மணத்தக்காளிக் கீரை. இக்கீரையை தவறாது உணவில் பயன்படுத்தி ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளலாம்.

## மகளிர் குழு திறன் மேம்பாட்டு பயிற்சி: உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடம் அதிகாரி தகவல்



நத்தம், உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று மகளிர் குழுக்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியில் திவேளாண்மைத்துறை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

பயிற்சிமுகாம்

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ள வேலம்பட்டி ஊராட்சி சேர்வீடு கிராம சமுதாயக்கூட வளாகத்தில் அம்மா பண்ணை மகளிர் குழு திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் நடந்தது. முகாமை மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சம்பத்குமார் தலைமை தாங்கி தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார்.

அப்போதுஅவர்கூறியதாவது:-

இந்தியா சுதந்திரம் அடைந்த போது ஏராளமான விவசாய நிலங்கள் இருந்தன. அப்போது மக்கள் தொகை சுமார் 30 கோடியாக இருந்தது. அன்றைக்கு உணவு பற்றாக்குறை காரணமாக வெளி நாடுகளில் இருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இப்போது நிலைமாறி 40 சதவீத விளைநிலங்கள் மட்டுமே உள்ளன.

சொட்டுநீர்பாசனம்

தற்போது இருக்கக்கூடிய விளை நிலங்கள் மூலம் நவீனமுறையில் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் விவசாயிகள் தான். தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 110 மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டு டெல்லியில் அதற்கான சிறப்பு விருதினை தமிழக வேளாண்மைத்துறை பெற்றுள்ளது. அடுத்த ஆண்டு இதற்கான இலக்கு 145 மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாய உற்பத்திக்காக சொட்டுநீர் பாசனம், பண்ணை மகளிர் திட்டம், வீரிய ஒட்டுரக சாகுபடி, உள்ளிட்ட பல்வேறு வகைகளில் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தவிர நெல், உளுந்து, மக்காச்சோளம், உள்ளிட்ட தானிய வகைகள் உற்பத்தியை விவசாயிகள் முனைப்புடன்அதிகரித்துவருகின்றனர்.

தமிழகம்முதலிடம்

உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இதில் மகளிர் குழுக்களும் திறன்மேம்பாட்டு பயிற்சி பெற்று முன்னோடி விவசாயிகளாக வரவேண்டும். அதற் கான சுழல் நிதி வழங்கப் பட்டுள்ளது. மேற்கண்டவாறு அவர் பேசினார். முகாமிற்கு ஊராட்சி தலைவர் செல்வி கண்ணன், துணைத்தலைவர் மதியழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ரவிபாரதி வரவேற்றார். முகாமில் துணை இயக்குனர் பாஸ்கரன், அட்மா தொழில்நுட்ப மேலாளர் ராஜாங்கம் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள். வேளாண்மை அலுவலர் ஆனந்தன் நன்றி கூறினார்.

<u>**தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 20 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்ய இலக்கு வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் தகவல்**</u>




நம்பியூர் அருகே நடந்த பயிற்சி முகாமில் விவசாயி ஒருவருக்கு வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி உயிர் உரங்களை வழங்கியபோது எடுத்த படம்.

கோபிசெட்டிபாளையம், தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் 20 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்து உள்ளார்.

பயிற்சி முகாம்

விவசாயிகளுக்கான விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நம்பியூர் அருகே கூடக்கரையில் நடைபெற்றது. முகாமுக்கு நம்பியூர் வட்டார வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் சிறு தானியங்கள் உற்பத்தியின் அளவு அதிகரித்து உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு 13 லட்சத்து 42 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்ட சிறுதானியங்கள் தற்போது 26 லட்சத்து 95 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. சுமார் இரண்டு மடங்கு உற்பத்தி அதிகரித்து காணப்படுகிறது. கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் 62 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் 58 லட்சத்து 90 ஆயிரம் ஹெக்டராக குறைந்து உள்ளது. சாகுபடி செய்யப்படும் பரப்பளவு குறைந்தாலும் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தி சாதனை படைத்து உள்ளோம்.

இலக்கு

கடந்த ஆண்டு 27 லட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தி செய்து உள்ளோம். அதில் தானியப் பயிர்களின் அரசி என்று அழைக்கப்படும் மக்காச்சோளத்தின் பங்கு அதிகமாக உள்ளது. அதுபோல் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 20 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. கோழி தீவனங்கள் தயாரிப்பதற்கு ஒரு மாதத்துக்கு ஒரு லட்சம் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது. தேவை அதிகமாக உள்ளதால் மக்காச்சோளத்தின் உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மை துறை மூலம் பல்வேறு நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் 28 ஆயிரம் செடிகளுக்கு குறையாமல் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். நுண்ணூட்டப் பற்றாக்குறை உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 5 கிலோ ஜிங் சல்பேட் இடுவது சிறந்ததாகும். மக்காச்சோளம் சாகுபடியில் அசோஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்களை பயன்படுத்தும் போது யூரியா பயன்பாட்டை குறைக்க முடியும். தண்டு துளைப்பான், குருத்து ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்த “இமிடோகுளோபிரிட்” என்ற மருந்தை பயன்படுத்தி விதைநேர்த்தி செய்து விதைக்கலாம்.

பயிர் பாதுகாப்பு

மக்காச்சோள பயிரில் கதிர் வரும் பருவத்திலும், பால் பிடிக்கும் போதும் வறட்சி ஏற்பட்டால் மகசூல் பாதிப்படையும். அறுவடைக்கு 10 நாட்களுக்கு முன்பு நீர்ப் பாசனம் செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு அவர் கூறினார். நம்பியூர் வேளாண்மைத்துறை அதிகாரி பிரியா கலந்துகொண்டு மக்காச்சோள பயிர் பாதுகாப்பு குறித்து விளக்கி பேசினார். அதைத்தொடர்ந்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் வழங்கப்பட்டன. முகாமில் சுண்டக்காம்பாளையம் ஊராட்சி தலைவர் வெங்கடாசலமூர்த்தி, கூடக்கரை கூட்டுறவு கடன் சங்க தலைவர் சிவக்குமார் உள்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். முடிவில் உதவி அலுவலர் விஜயகுமார் நன்றி கூறினார்.

## நகர்ப்புற காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம் தோட்டக்கலைத்துறை வழங்குகிறது



மதுரை, 450 நகரங்களில் வாழும் மக்களுக்கான காய்கறி தேவையினை ஈடுகட்டும் வகையில் விவசாயிகளை ஊக்குவித்து காய்கறி உற்பத்தியை பெருக்கும் விதமாக தோட்டக்கலைத் துறை சார்பில் காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்துடன் தொழில்நுட்ப பயிற்சியும் வழங்கப்படுகிறது.

காய்கறி அபிவிருத்தி திட்டம்

இது குறித்து மதுரை தோட்டக்கலை உதவி இயக்குநர் காமராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, மதுரை மாநகராட்சி போன்ற பெரிய நகரங்களின் காய்கறி தேவையை ஈடுசெய்யும் வகையில் மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக பெருநகர காய்கறி அபிவிருத்தி தொகுப்பு திட்டம் என்ற திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளை பல்வேறு குழுக்களாக ஒருங்கிணைத்து விவசாயம் செய்திடும் முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தற்போது மதுரை மேற்கு வட்டாரத்தில் காய்கறி சாகுபடி விவசாயிகளை கணக்கெடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த திட்டத்தின் மேற்கு வட்டாரத்தில் வீரிய ஒட்டு காய்கறி சாகுபடி செய்திடும் விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்தி, அதாவது, ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாய் வரை மானியம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, வீரிய ஒட்டு காய்கறி சாகுபடி செய்திடும் விவசாயிகள் தங்களது நில ஆவணங்களான சிட்டா, அடங்கல், குடும்ப

அட்டை, பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படம் ஆகியவற்றுடன் மதுரை மேற்கு யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

திட்டமானியம்

இந்த திட்டத்தின் கீழ் அரை ஏக்கரில் இருந்து 5 ஏக்கர் வரை உள்ள நிலத்தில் பயிரிடும் காய்கறிகளுக்கு மானியம் பெறமுடியும். அதாவது,. விவசாயிகள் சாகுபடி செலவுகளான நிலம் தயார் செய்தல், விதை, உரம், மருந்து, விவசாய கருவிகள், களை எடுத்தல், மூடாக்கு போடுதல், பந்தல் அமைப்பது ஆகிய பணிகளுக்கான செலவை மானியமாக பெறமுடியும். மானியத்தை பெற மேற்கண்ட செலவுக்கான பட்டியல்களை தோட்டக்கலை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இது தவிர, குழுவாக இணைந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களது குழு உற்பத்தி செய்யும் காய்கறிகளை விற்பனை செய்ய வாகனம் வாங்கவும், காய்கறிகளை ஓரிடத்தில் இருந்து சேகரிக்கும் சேமிப்பு மையம் உருவாக்கவும், சில்லறை விற்பனை செய்திடவும் மானியம் வழங்கிட திட்டத்தில் வழிவகைகள் உள்ளது. குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பசுமைக்குடில், நிழல் குடில் அமைத்து வீரிய ஒட்டு காய்கறி சாகுபடி செய்திட தனியாக மானியம் பெற முடியும்.

தொழில்நுட்ப பயிற்சி

இந்த திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடி செய்வதில் நவீன உத்திகளை கையாள விரும்பும் விவசாயிகளுக்கு மேற்கு வட்டார தோட்டக்கலை துறை மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தொடர்பான கூடுதல் விபரங்களை பெற மதுரை மேற்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரை 98652 80167 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பலத்த மழை வெயிலின் தாக்கம் குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி



புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக வெயிலின் தாக்கம் குறைந்ததால் பொதுமக்கள்மகிழ்ச்சிஅடைந்தனர்.

பலத்தமழை

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் பகல் நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் இருந்தனர். இந்த நிலையில் நேற்று அதிகாலையில் புதுக்கோட்டையில் பலத்த மழை பெய்தது. சுமார் 1½ மணி நேரம் பெய்த மழையால் புதுக்கோட்டையில் பொது அலுவலக வளாகம் உள்பட பல பகுதிகளில் மழைநீர் குளம்போல் தேங்கியது. இந்த திடீர் மழையின் காரணமாக வெயிலின் தாக்கம் குறைந்ததால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அறந்தாங்கி,கீரமங்கலம்

இதைப்போல அறந்தாங்கியிலும் நேற்று அதிகாலை முதலே பலத்த மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக ஒரு சில தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. மேலும் சாலைகளிலும் மழைநீர் ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டனர். இந்த மழையின் காரணமாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கீர மங்கலம் பகுதியில் கடந்த சில மாதங்களாக மழையின்றி பெரும் வறட்சி ஏற்பட்டு கடுமையான வெயில் தாக்கம் இருந்தது. இதனால் விவசாய பயிர்கள் தண்ணீர் இன்றி காயும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் நேற்று காலை கீரமங்கலம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் திடீரென மிதமான மழை பெய்ததால், வெயிலின் தாக்கம் குறைந்து

காணப்பட்டது. மேலும் அரிமளம், இலுப்பூர், திருவரங்குளம் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

**<u>விவசாயிகள்மகிழ்ச்சி</u>**

இந்த மழை புதுக்கோட்டை மாவட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள எள் பயிருக்கு ஏற்றதாக உள்ளதால், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இருப்பினும் கோடை காலத்தில் அதிகம் விற்பனை ஆகும் தர்பூசணி, இளநீர், மோர், சர்பத் போன்றவற்றின் விற்பனை பாதிக்கப்பட்டது.

**<u>ஆழ்வார்திருநகரி நெல் கொள்முதல் நிலையத்தில் கலெக்டர் ஆய்வு</u>**



தூத்துக்குடி, ஆழ்வார்திருநகரியில் நெல் கொள்முதல் நிலையத்தில் கலெக்டர்ஆய்வுசெய்தார்.

கலெக்டர்ஆய்வு

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நெல் கொள்முதல் நிலையத்தை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறும் போது, “தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் விதத்தில் மாவட்டம் முழுவதும் 20 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளன. தற்போது, குரும்பூர், நாசரேத், ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம், குலையன்கரிசல், வசவப்பபுரம், இருவைப்பபுரம் ஆகிய 7 இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 593 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு

உள்ளது" என்றார். அப்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் முருகேசன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: கடலை எண்ணை விலை உயர்வு வத்தல், சீனி விலை குறைந்தது</u>**

விருதுநகர் மார்க்கெட் டில் கடலை எண்ணை யின் விலை உயர்ந்துள்ள நிலையில் வத்தல், சீனி யின் விலை குறைந்து உள்ளது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.5,300 முதல் ரூ.6,200 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.7,300 முதல் ரூ.8,300 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.5,600 முதல் ரூ.7,000 வரை யிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.7,200 முதல் ரூ.7,700 வரையிலும், துவரம் பருப்பு ரூ.9,300 முதல் ரூ.9,600 வரையிலும் விற் பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.10,300 முதல் ரூ.10,500 வரையிலும், பாசிப் பருப்பு 100 கிலோ மூடைக்கு ரூ.10,800 முதல் ரூ.11,400 வரையிலும் விற்பனை செய்யப் பட்டது. மல்லி லயன் ரகம் ரூ.4,700 முதல் ரூ.4,900 வரை விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டாலுக்கு ரூ.500 விலை குறைந்து ரூ.6,000 முதல் ரூ.6,900 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,700 முதல் ரூ.7,800 வரையிலும், முண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.6,500 முதல் ரூ.6,600 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1,700 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

கடலைஎண்ணை

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ ரூ.30 விலை உயர்ந்து ரூ.1,450 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆகவும், சூரியகாந்தி எண் ணை ரூ.1,225 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ மூடைக்கு ரூ.500 விலை உயர்ந்து ரூ.5,000 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.4,200 ஆகவும், எள் புண்ணாக்கு 65

கிலோ ரூ.2,090 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.845 ஆகவும் நல் லெண்ணை 15 கிலோ ரூ.3,850 ஆக விற்பனை செய்யப்பட்டது.

சீனி

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்குரூ. 20 விலை குறைந்து ரூ.2,860 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டாலுக்கு ரூ.4,200 ஆகவும், பொரிகடலை 55 கிலோ வுக்கு ரூ.80 விலை குறைந்து ரூ.3,020 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.3,250 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,500 முதல் ரூ.3,520 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,950 முதல் ரூ.5,000 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ. 10 விலை உயர்ந்து ரூ.3,105 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,045 ஆகவும் விற்பனை செய்யப் பட்டது. விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.18,100 ஆகவும், ஏ ரகம் ரூ.17,000 ஆகவும், சி ரகம் ரூ.14,000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,850 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.7,400 ஆகவும் விற்பனை ஆனது.